சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 02.07.2026 SC. 89/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிச்சைபாண்டியன் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW4 | | | |

---

முதல் விசாரணை

நான் தேனி சைபர் கிரைம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி கடந்த 31.05.2024 ல் ஓய்வு பெற்றேன். தற்போது தேனியில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்னால் நான் கூடலூர் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது உத்தரவுப்படி கூடுதல் பொறுப்பாக கடந்த 15.11.2022 ம் தேதியன்று கம்பம் வடக்கு காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது காலை சுமார் 6.30 மணிக்கு கம்பம் வடக்கு காவல்நிலைய குற்ற எண். 358/22 பிரிவுகள் 294(b), 307 இ.த.ச.பிரிவின் கீழ் சார்பு ஆய்வாளர் விஜய் ஆனந்த் என்பவர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்திருந்தார். அது அ.சா.ஆ.2 அதை நான் மேல் விசாரணைக்கு எடுத்தக்கொண்டு நான் சம்பவ இடத்திற்கு காலை 7.00 மணிக்கு சென்றேன். அங்கு சாட்சிகள் பிரபாகரன், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், அ.சா.ஆ.3, பார்வை மகஜர் அ.சா.ஆ.4 தயார் செய்தேன். பின்னர் சாட்சிகள் சிவனேசன், ராம்ஜிபிரபு, சந்தோஷ், பிரபாகரன், சுரேஷ் ஆகியோர்களை விசாரித்து அவர்கள் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் எதிரியை தேடியதில் எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் 15.11.2022 ம் தேதி காலை 11.30 மணிக்கு கம்பம் மணிக்கட்டி ஆலமரம் பிரிவில் வைத்து அடையாளம் கண்டு எதிரியிடம் வழக்கு விவரத்தை கூறி கைது செய்தேன். கைது செய்த விவரம் குறித்து அவர்கள் உறவினர்களிடம் தெரிவித்தேன். பின்னர் அவர் சாட்சிகள் சந்திரசேகர், அன்பழகன்,ஆகியோர் முன்பாக தானாக முன் வந்து எதிரி ஜெகன் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால் அவர் ஒளித்து வைத்திருந்த சிவனேசனை குத்தி கிழித்து பயன்படுத்திய கத்தயை எடுத்து தருகிறேன் என கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் எதிரி ஜெகன், சாட்சிகள் உடன் சென்று 15.11.2022 ம் தேதி 13 மணிக்கு அவர் அடையாளம் காண்பித்த இடமான கம்பம் புதுக்குளம் ரோடு டாஸ்மாக் கடைக்கு மேற்கே புதரிலிருந்து எடுத்து அஜர் செய்த சுமார் 17.5 செ.மீ நீளமுள்ள பிளாஸ்டிக் கைப்பிடி போட்ட சில்வர் கத்தி ஒன்றை எடுத்து கொடுத்ததை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சி கைப்பற்றினேன். அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆகும். கத்தி ச.பொ.1 ஆகும். பின்னர் எதிரி மற்றும் போலீஸ் பார்டி சகிதம்

கைப்பற்ற பட்ட வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து தக்க வழிநடை மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கைப்பற்ற வழக்கு சொத்திற்கு படிவம் 91 தயார் செய்து நீதிமன்றத்தில் RPR 275/22 ன் படி ஒப்படைத்தேன். அது அ.சா.ஆ.7 ஆகும். அதன்பின்னர் விடுப்பில் சென்ற ஆய்வாளர் சரவணன் பணிக்கு திரும்பியதால் வழக்கு கோப்பை அவரிடம் மேல்விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

நான் என்னிடம் உள்ள கோப்புகளை பார்வையிடும் போது ஆய்வாளர் சரவணன் அவர்கள் கடந்த 01.02.2023ம் தேதியன்று சாட்சி சஞ்சய், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அதன்பின்னர் அன்றைய தினமே காயம் பட்ட வாதிக்கு மருத்துவர் சிகிச்சை அளித்த மாணிக்கம் என்பவரை விசாரித்து காயம் சான்று பெற்றுள்ளார். அது அ.சா.ஆ.8 ஆகும். மேலும் கம்பம் அரசு மருத்துவமனையில் அ.சா.1 சிவனேசனுக்கு முதலுதவி அளித்த மருத்துவர் சரண்யா என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டு சான்றை பெற்றுள்ளார் அது. அ.சா.ஆ.9 ஆகும். பின்னர் அதே நாளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த கம்பம் வடக்கு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் விஜய் ஆனந்தை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி ஜெகன் மீது மேலே கண்ட பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். சம்பந்தப்பட்ட கோப்புகளை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

<u>குறுக்குவிசாரணை</u>

நான் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரித்து மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்து சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றும், வழக்கு சொத்துக்களை கைப்பற்றவில்லை என்றும், அதே போல் ஆய்வாளர் சரவணன் ஒருதலைப்பட்சமாக குற்ற இறுதி அறிக்கை எதிரி மீது தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.02 19:19:04 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்